1. ஒரு சமபக்க முக்கோணத்தின் பக்கங்கள் 5 செ.மீ.லிருந்து 7 செ.மீ. ஆக அதிகரிக்கப்பட்டால், அதன் கோணங்களின் அளவு

   அ) அதிகரிக்கும் ஆ) மாறாது

   இ) முக்கோணம் அமைக்க இயலாது ஈ) குறையும்

2. ஏதேனும் மூன்று கோட்டுத்துண்டுகளைக் கொண்டு முக்கோணத்தை அமைக்க இயலும்.

3. அசமபக்க முக்கோணம் எப்போதும் விரிகோண முக்கோணமாகவே இருக்கும்.

4. ஒரு சமபக்க முக்கோணத்தின் ஒவ்வொரு கோணமும் $60^0$ ஆகும்.

5. செங்கோண முக்கோணம் ஆனது இருசமபக்க முக்கோணமாக இருக்க இயலாது.

6. ஒரு முக்கோணத்தின் ஒரு கோணம் விரிகோணம் எனில், அது ___

7. குறைந்த எண்ணிக்கையிலான பக்கங்களைக் கொண்ட ஒரு பலகோணம் முக்கோணம் ஆகும்.

8. ஒரு முக்கோணத்தின் இரண்டு பக்கங்கள் 7 செ.மீ., 5 செ.மீ. எனில் மூன்றாவது பக்கம் ______ ஆக இருக்க இயலாது.

   அ) 6 செ.மீ. ஆ) 10 செ.மீ இ) 2 செ.மீ ஈ) 8 செ.மீ

9. $35^0$, $65^0$, $80^0$ ஆகிய கோணங்களைக் கொண்ட முக்கோணத்தின் வகை

10. ரிஷி மற்றும் ராஜா ஆகியோர் முறையே 10 செ.மீ. மற்றும் 6 செ.மீ. நீளமுள்ள உறிஞ்சு குழல்களைக் (straw) கொண்டுள்ளனர். அந்த உறிஞ்சு குழல்களைப் பயன்படுத்தி முக்கோணம் அமைக்க பின்வரும் நபர்களுள் யாரைத் தேர்ந்தெடுப்பார்கள்?

    அ) கவியிடம் 11 செ.மீ. நீளமுள்ள உறிஞ்சுகுழல் உள்ளது

    ஆ) நிஷாவிடம் 20 செ.மீ. நீளமுள்ள உறிஞ்சுகுழல் உள்ளது

    இ) ரவியிடம் 17 செ.மீ. நீளமுள்ள உறிஞ்சுகுழல் உள்ளது

    ஈ) கலாவிடம் 2 செ.மீ. நீளமுள்ள உறிஞ்சுகுழல் உள்ளது


LIVEWORKSHEETS